2011 ஆகஸ்ட் 30]

Mini Stadium *கட்டும் திட்டம் ஒன்றை மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்தார்கள். கடந்த மைனாரிட்டி கருணாநிதி ஆட்சியிலே அதைக் கிடப்பிலே போட்டுவிட்டனர். இன்றுவரை அப்படி நிலுவையிலேயே உள்ளதை இப்போது நம் அம்மா அவர்களினுடைய அரசு கட்ட ஆரம்பிக்குமா என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டு, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கண்டிப்பாக முன்னுரிமை அடிப்படையிலே நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

69—

புதிய கட்டடம்

***23—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், குறிச்சியிலுள்ள Q1255 கூட்டுறவு நாணயச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட இளையான்குடி தாலுகாவில் உள்ள குறிச்சி என்ற ஊரில் Q1255 குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்படி தொடக்க

வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு நபார்டு வங்கியின் ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறப்பட்டவுடன் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இங்கு கூட்டுறவு நாணயச் சங்கம் ஏதும் செயல்படவில்லை என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்று தமிழகத்திற்கு முத்தான நிதிநிலை அறிக்கையை அளித்து இன்றைக்கு தமிழகத்தை வளர வைத்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

முற்பகல் 10–30

தாயுள்ளம் கொண்ட தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த வாரத்தில், கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசால் புறக்கணிக்கப்பட்ட மானாமதுரை தொகுதிக்கு ஒரு காவல் நிலையம், ஒரு மகளிர் காவல் நிலையம், ஒரு கருவூலக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி போன்ற நலத் திட்ட உதவிகளையெல்லாம் அர்ப்பணித்துள்ளார்கள். அதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியத்தில், குறிச்சி, பிராமணகுறிச்சி, முட்டக்குறிச்சி, வேலடிமடை, கிழநட்டூர் போன்ற 5 கிராமங்களை உள்ளடக்கி, குறிச்சியிலே தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி தொடங்கப்பட்டது. அதற்குப் பின்னர் அது விவசாய நாணயச் சங்கமாக மாற்றப்பட்டு, அதற்குப் பின்னர் இன்றைக்கு அது Q1255 குறிச்சி கூட்டுறவு கடன் சங்கமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த வங்கி கடந்த காலத்தில் பழைய கட்டடத்தில் இயங்கி வந்தது. தற்போது அது இடிந்து விட்டது. இப்போது 1,200 ரூபாய் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அந்த வங்கியில் இன்றைக்கு மொத்தம் 1,237 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அங்கே, நகைக் கடன், பயிர்க் கடன் வழங்கப்பட்டு வருகிறது. ஆக, அந்தப் பகுதி மக்களுடைய, விவசாய மக்களுடைய நலனைக் கருதி, அந்த வங்கியினுடைய நலனைக் கருதி, அங்கே ஒரு புதிய கட்டடம்,

சொந்தக் கட்டடமாகக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, இளையான்குடி தாலுகாவிலுள்ள குறிச்சி என்ற ஊரில் Q1255 குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் செயல்பட்டு வருகிறது. இந்தப் பகுதியில் தற்போது கூட்டுறவு நாணயச் சங்கம் ஏதும் இல்லை. Q1255 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்தச் சங்கத்திற்கென சொந்தமாக 20 சென்ட் நிலம் உள்ளது. இதில் 12 சென்ட் அளவிற்கு பழைய கட்டடம் ஒன்றும், 8 சென்ட் அளவிற்குக் காலி மனையும் உள்ளது. கட்டடம் கட்டும் அளவிற்கு சங்கத்தின் நிதி ஆதாரம் தற்போது இல்லை. எனினும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட நபார்டு வங்கியின் ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதித் திட்டத்தின்கீழ் உதவி பெற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி கூட்டுறவு கடன் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட நிதி பெறப்பட்டவுடன், குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

திரு. ம. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், அங்கே கட்டடம் கட்டப்படும் என்று அறிவித்ததற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியினைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் ப. சிவக்கொழுந்து, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.